1983 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

கேளிக்கை வரி (இரண்டாவ திருத்த) சட்டமுன்வடிவு, 1983 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெறுவதை நான் எதிர்க்கிறேன். ஏனெனில் இந்த காம்பவுண்டிங் டேக்ஸ் முறையில் பல சிக்கல்கள் நடைமுறையில் இருக்கின்றன ஊட்டியிலே இருக்கக்கூடிய.—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாகக் குறிப்பிட்டு கேட்டுக் கொண்டேன், அறிமுக நிலையில் தயவுசெய்து விளக்கம் அதிகம் வேண்டாம் என்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காம்பவுண்டிங் முறையில் என்னென்ன குறைபாடுகள் என்று விளக்கமாக பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஊட்டி என்றும் கொடைக்கானல் என்றும் இதிலே விளக்கமாக போய்க் கொண்டிருக்க நியாயமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்; தலைவர் அவர்களே, உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும். காம்பவுண்டிங் டாக்ஸ் முறையில் இருக்கும் சில அடிப்படை குறைபாடுகள், ஊட்டியிலே 6 தியேட்டர்கள் கட்டப்பட்டிருக்கிறன. அங்கிருக்கும் ஜனத் தொகை கணக்கின் படி வசூல் அவ்வளவு சிறப்பாக இல்லை ஆகவே நஷ்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். 21 காட்சிகள் காட்ட முடிவதில்லை 17 காட்சிகள் தான் காட்ட முடிகிறது. புதுக்கோட்டையிலே 80,000 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுறது. 12 தியேட்டர்கள்

இருக்கின்றன. 12 தியேட்டர்களிலும் கலெக்ஷன் குறைவாகத் தான் இருக்கிறது. இந்த காம்பவுண்டிஸ் டாக்ஸை அப்ளை செய்தால் எங்களால் சமாளிக்க முடியாது என்று 4 தியேட்டர் களை முடிவிட்டதாக கேள்வி. முனிசிபாலிட்டியாக இருந்தாலும், டவுன் ஷிப் ாக இருந்தாலும் 25 சதவீதம்——

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, இவற்றையெல்லாம் தாங்கள் அனுமதிக்கிறீர்களா?

(முற்பகல் 10·40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி

திரு. சோ. அழகாசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது எங்களு டைய உறுப்பினர்கள் பல வேறு கருத்துக்களை முன்வைத்திருக் கிறார்கள். அதையொட்டி நானும் எனது கருத்தினை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே இரண்டு விஷயங்களைச் சரியாகச் சொல்லி இருக்கிறார்கள். தென்மேற்குப் பருவமழையும், வட கிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டது என்பதை உறுப்பினர் அனைவரும் அறிவார்கள். இந்த மாநிலத்தில் தற்போது நிலவு கிற வறட்சி நிலைமையானது நம்முடைய நினைவுக்குத் தெரிந்த வரையில் இதுவரை இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை இருந்தது இல்லை. எனவே வறட்சி நிலைமை மிகவும் மோசமாக சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தது. கடுமையாக உள்ளது என்பதைக் கூறி இருக்கிறார்கள். ஆனால் இதனுடைய பாதிப்பு தமிழகத்தைத் தாக்காமல் இருப்பதற்கு காலாகாலத்திலே இந்த அரசு உஷாரான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றதா என்றால் இல்லை ஆனால் இனிமேல் என்ன செய்யப்போகிறார்கள் என்பது பற்றியும் ஆளுநர் உரையிலே கொடுக்கவில்லை. பொதுவாக இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள நிலைமை யினைப் பார்த்தால் இந்தியாவிலே உள்ள மொத்தமான நிலைமையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது வறுமைக்கோட்டுக்கு கீழே வாழக்கூடிய மக்களின் எண்ணிக்கை இங்கே மிக மிக